

# கண்ணனின் வதங்களும் அதன் உட்கருத்துகளும்

தீபாவளி என்றாலே நரகாசுரன் வதமும் அதை செய்த கண்ணனின் நினைவும்தான் நமக்கு வரும். கண்ணனின் கதைகளை – குறிப்பாக கண்ணன் இளம் குழந்தையாக பால கிருஷ்ணனின் கதைகளை -- படிக்கும் போது ஏதோ ஒரு சிறு குழந்தை விளையாட்டு போலவோ அல்லது அசுரர்களை வதம் செய்யும் படலம் போலவோ தோன்றும். இதில் என்ன பெரிய அர்த்தம் இருக்கிறது என்றோ இதனால் வாழ்க்கை பாடங்கள் எதாவது இருக்கும் போலவோ மேல் எழுந்தவாரியாக பார்த்தல் தெரியாது. ஆனால் சற்று ஆழ்ந்து படித்து உணர்ந்தோம் ஆனால் இந்த சேஷ்டிதங்களும் வதங்களும் அந்த வதங்களின் ***வரிசையும்*** **(sequence)** மிக பெரிய தத்துவங்களையும் ஜனன மரண சுழற்சிகளில் இருந்து நம்மை விடுவிக்க கீதாசார்யன் கூறி இருக்கும் மிக உன்னதமான, மிக நிதர்சனமான மருந்து என உணரலாம். இந்த கட்டுரையில் சிறிது இந்த மருந்தை சுவைக்க போகிறோம்.



கண்ணன் முதலில் வதம் செய்தது பூதனா என்னும் அரக்கியைதான். அவள் ஒரு அழகிய பெண் உருவம் எடுத்துக்கொண்டு கண்ணனுக்கு விஷத்துடன் கலந்த பால் கொடுப்பதற்கு வந்தாள். கண்ணன் அவள் மார்பில் இருந்து பால் அருந்தும் பொது பாலுடன் அவள் உயிரையும் பறித்தான். உயிர் இழந்து தன்னுடைய சுய உருவத்துடன் கிழே விழுந்த பூதனாவின் உடலில் இருந்து சந்தனம் மற்றும் பல நல்ல மணம் உள்ள பொருள்களின் நறுமணம் வீசிற்று.

நமக்கு இந்த உலகில் முதலில் ஏற்படும் பந்தமும் ஆசையும் தாய் பாலில் மீதுதான். பாலுக்க்காகவே (உணவுக்காகவே) முதலில் எப்போதும் அழுகிறோம்; பிறகு உணவுக்காகவே, வயிற்று பசியை போக்கவே எப்போதும் வாழ்கிறோம்; நம்முடைய பிறவி லட்சியமான "பரமாத்மாவுடன் ஐக்கியம்" என்பதை மறக்க முதல் ஏது தாய் பால்தான். இந்த ஆசையை, வயிற்று பசி மோகத்தை ***ஆரம்பத்திலேயே*** கிள்ளி எரிய வேண்டும் என்பதை வலியுறுத்தவே கண்ணன் ***முதலில்*** பாலுடன் சேர்ந்து பூதனையின் உயிரையும் சேர்ந்து குடித்தான்.

ஆனால் தவறான எண்ணத்துடன் வந்தாலும் அவள் தாய் பால் கொடுக்க முயன்றதால் தாயின் ஸ்தானத்தைஅடைந்தாள். இந்த உலகில், ஈடு செய்ய முடியாத ஸ்தானம் தாயின் ஸ்தானம் மட்டுமே. தப்பான எண்ணத்துடன் செய்தாலும் ஒரு நல்ல காரியம் நல்ல பயனையே கொடுக்கும். தெரியாமல் உட்கொண்டாலும் மருந்து தன் வேலையை செய்கிறது அல்லவா? அது போலத்தான்.



இதை உணர்த்தவும், தாயின் ஸ்தானத்தின் மேன்மையை எடுத்து காட்டவும், வேறு யாருக்கும் கிடைகாத நறு மண வரத்தை கண்ணன் அவளுக்கு அளித்தான். நாம் முதலில் விட வேண்டிய பாசத்தையும் அதே சமயத்தில் தாய்மையின் மேன்மையும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்று உணர்த்துவதுபோல கண்ணன் பூதனா வதத்தில் நமக்கு உணர்த்தி இருக்கிறான்.



கண்ணன் அடுத்து வதம் செய்தது த்ருனாவர்தன் என்னும் அசுரனை. இவன் காற்று வடிவமாக வந்து தொட்டிலில் படுத்திருந்த கண்ணனை ஆகாயத்தில் எடுத்து சென்று கொல்ல பார்த்தான். அவன் மேலே பறக்க பறக்க கண்ணனின் பாரம் தாங்காமல் கீழே விழுந்து மடிந்தான்.

கண்ணன் கீதையில் கூறுவது "மனதை கட்டு படுத்துவது மிக மிக கடினம் -- அது காற்றை கட்டுபடுத்துவது போல -- விடா முயற்சியாலும் திடமான மன உறுதியாலும் மட்டுமே அது சாத்தியமாகும். " எப்படி கட்டுபடுத்துவது? கண்ணனின் உருவமும் எண்ணமும் நம் நெஞ்சை மனதை போட்டு அழுத்தவேண்டும் -- அப்போதுதான் அந்த காற்று போன்ற சஞ்சலிக்கும் அலை பாயும் மனதை கட்டு படுத்த முடியும். இதை நமக்கு உணர்த்தத்தான் கண்ணன் காற்று வடிவமாக வந்த த்ருனாவர்தனை அழுத்தி கொன்றான். இந்த உலகில் வந்து பிறந்து தாய் பாலுக்கு, உணவுக்கு, மயங்கி வாழும் வாழ்கையில் இருந்து வெளியே வர காற்று போன்ற கட்டுக்கடங்காமல் ஓடும் மனதை அடக்க கண்ணனின் நினைவே ஒரே கதி என்று நாம் உணர வேண்டும்.



ஆயர் குலமக்கள் ஆயர்பாடியை விட்டு பிருந்தாவனம் அடைந்தார்கள். கண்ணன் கன்று மேய்க்க தொடங்கினான். இதற்க்கு பிறகு கண்ணன் முதலில் வதம் செய்தது கன்று உருவம் கொண்ட வத்சாசுரன் என்னும் அரக்கன். இந்த அசுரனை கண்ணன் வாலை பிடித்து சுற்றி எறிந்து கொன்றான். கண்ணன் கன்றுகளை காக்க வந்தபோது கன்று உருவத்தில் வந்து அழிக்க முயன்றதை போல நம் போலவே வேஷம் பூண்டு நம் நடுவே உலா வரும் துரோகிகளை அவர்கள் வாலை ஒட்ட நறுக்கி கண்ணன் தூர தூக்கி எறிவானாக! இதை ஊர்ஜித படுத்தவே கண்ணன் கன்று வேஷத்தில் வந்த வத்சாசுரனை வாலை பிடித்து சுழற்றி அடித்து கொன்றான்.





அடுத்து வருவது அகாசுரனின் வதம். அகாசுரன் ஒரு மலை பாம்பு வடிவத்தில் இருந்து தன் வாயை திறந்து வைத்து கொண்டு இருந்தான். அதை ஒரு குகை என்று நினைத்து கோபர்கள் விளையாட புகுந்தார்கள். பிறகு பயந்து கண்ணை கூப்பிட்டு ஓலமிட்டனர். நமது வாழ்கையில் நாமும் என்ன ஆபத்து என்று அறியாமல், ஆழம் தெரியாமல் காலை (தலையை?) விடுகிறோம். பிறகு கைகளை பிசைத்து இறைவனின் உதவியை நாடுகிறோம். கோபர்களை காப்பாற்ற கண்ணன் தானே அந்த மலை பாம்பின் வாயில் புகுந்து, கொண்டு வளர ஆரம்பிக்க, பாம்பு வடிவில் இருந்த அகாசுரனும் வயிறு வெடித்து உயிர் இழந்தான். இதே போல், நமது கஷ்டங்கள் தீர இறைவனே நம் உட்புகுந்து, நம் கஷ்டங்களை தகர்த்து எறிகிறார். கோபர்கள் கூவினது போல, உதவிக்கு அழைக்க வேண்டியதே நாம் செய்ய வேண்டியது. மற்றதை இறைவன் பார்த்து கொள்வான்.



கண்ணன் காளிங்கனை கொன்றதிலும் ஒரு பெரிய வாழ்க்கை தத்துவம் அடங்கி இருக்கிறது. காளிங்கன்என்னும் பாம்பு கருடனிடம் இருந்து தப்ப கருடன் வர முடியாத ஒரு மடுவில் போய் குடி புகுந்தான். இனி நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்றும், இனி நம்மக்கு என்ன ஆபத்தும் இல்லை என்ற இருமாபுடனும் எல்லோரையும் துன்புறுத்தி கொண்டு இருந்தான். கடைசியில் கண்ணனின் நண்பர்களுக்கே விஷ போதை கொடுத்தான். இந்த இருமாப்பையும் கர்வத்தையும் ஒழிக்கவே கண்ணன் அவன் தலை மேல் நடனம் ஆடினான். காளிங்கனுக்கு பல தலைகள் உண்டு. கண்ணன் ஒரு தலையின் மேல் கால் வைத்தால் "அதனால் என்ன, என்னுடைய இன்னொரு தலையை தூக்குகிறேன்" என்று இறுமாப்புடன் மற்றொரு தலையை தூக்கினான். கடைசியில் சோர்ந்து போய் கீழே விழுந்தான். அவனும் அவன் மனைவியும் சுற்றத்தாரும் கண்ணனிடம் வேண்டி நற்கதி அடைந்தார்கள்.

நாமும் வாழ்க்கையில் இப்படித்தான் இருக்கிறோம். செல்வம், புகழ், செல்வாக்கு, நிலம், பதவி, அழகு, மனைவி, மக்கள் என்று ஆணவம் தர கூடிய பல விஷயங்கள் நம்மிடம் இருக்கும் பொது, "நம்மை யாரும் அசைக்க முடியாது" என்று ஒரு மன நிலையை அடைகிறோம்., நமக்கு பாடம் புகட்ட இறைவன் நமக்கு ஒரு சிறிய தண்டனை கொடுத்தால் "இதனால் என்ன, என்னுடைய மதியினாலும், செல்வதினாலும், பலத்தினாலும் (ஆகிய மற்ற தலைகளின் உதவியுடன்) நானே அனைத்திலும் வெற்றி கொள்வேன்" என்று செருக்கு கொள்கிறோம். காளின்கனின்



எல்லா தலைகளையும் காலால் அழுத்தி அவன் ஆணவத்தை அழித்து, அவனை தன்பால் ஈர்த்து கொண்டது போல, கண்ணன் நமது ஆணவத்தையும் பல வித செருக்குகளையும் கஷ்டத்தின் மேல் கஷ்டமாக கொடுத்து நம்மை புனிதப் படுத்துகிறான்.



அடுத்து பகாசுரன் என்ற அசுரன் நாரை உருவில் வந்து கண்ணனை கொல்ல பார்த்தான். கண்ணன் அவனுடைய வாயை கிழித்து கொன்றான். “மனிதன் கெடுவது தன் வாயாலே” என்று காட்டத்தான் கண்ணன் அந்த அரக்கனுடைய வாயை கிழித்து கொன்றானோ!

நாரை வடிவில் வந்த அரக்கனை கண்ணன் வாயை கிழித்து கொன்றான். மனிதன் தன் வாயால்தான் கெடுகிறான். சொல்ல கூடாத வார்த்தைகளை சொல்ல கூடாத இடங்களில் சொல்ல கூடாத பேர்களிடம் சொல்வதாலேயே மனிதன் பல கஷ்டங்கள் வருகின்றன. இதைக்காட்டவே கண்ணன் வாயை கிழித்து அசுரனை கொன்றான் என்று கொள்ளலாம்.

கம்சன் அக்ரூறரை அனுப்பி மதுரைக்கு கண்ணன் போவதற்கு முன்னால் புரிந்த கடைசி வதம் கேசி என்னும் அசுரனை. குதிரை வடிவம் கொண்டு மிகப் பெரிய உருவம் கொண்டு வந்த கேசியை கண்ணன் அனாயசமாக தூக்கி எரிந்து கொன்றான். தசா அவதாரத்தின் முதல் அவதாரமான மத்ஸ்ய அவதாரத்திலும் பகவான் குதிரை முகத்தை கொண்ட ஹயக்ரீவன் என்னும் அசுரனை கொன்று ஞானத்திற்கு அடிப்படையான, மூலமான வேதங்களை காப்பாற்றினார். அதே போல இங்கும், குதிரையை கொன்றது, நமது ஞான கண்ணை திறக்கத்தான் போலும்! ஆங்கிலத்தில் “last but not the least” என்பார்கள். கேசி வதமும் கடைசியில் வந்தாலும், மிக பிரதானமானது. இறைவனின் திரு நாமங்களில் முதல் நாமம் “கேசவன்”. “கேசியை கொன்றவன்” என்பது இதன் பல பொருள்களில் ஒன்று. அதனால்தான் முத்தாய்ப்பு வைத்தார் போல் பால கிருஷ்ணன் கேசியை கடைசியில் கொன்று, ஞானத்தின் சிறப்பை கண்ணன் உணர்த்தி உள்ளான்.

இப்படி பால கிருஷ்ணன் செய்த ஒவ்வொரு வதத்திலும், அதை அவன் செயத வரிசையிலும், நாம் வாழ்கையின் தத்துவங்களை அறியலாம். கிருஷ்ணா அவதாரத்தின் மேன்மை என்ன வென்றால் இத்தகைய அபூர்வமான பாடங்களை விளையாட்டாக அனாயசமாக ஆங்கிலத்தில் “in a fun-filled way” என்று சொல்வது போல கூறி இருப்பதால்தான் கண்ணனின் அவதாரம் எல்லா அவதாரங்களிலும் மிக உன்னதமான ஸ்தானத்தில் வைக்க படுகிறது.



வாழை பழத்தின் தோலுக்குள் சுவையான பழம் உள்ளது. அப்படியே, கண்ணனின் கதைகளுக்குள் சுவையான தத்துவம் அடங்கி உள்ளது. தோலை உரித்து உள்ளே இருக்கும் பழத்தை சுவைப்போமாக!